Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசி 1982

# லக்
# LUCK

8 3 7 6 4

## எண் சோதிட மாத இதழ்

### உள்ளே...

※ 1982 உங்களுக்கு எப்படி ?
※ நாமவிமோசனம் (உங்கள் பெயர் மாற்றம்)
※ எண்கலையில் ஆருட சாஸ்திரம்
※ மணமேடை
※ இம்மாத பலன்
※ அதிர்ஷ்ட வழிகாட்டி


ஆசிரியர்
எண் சோதிட நிபுணர்
எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்

ரூபா. 2-75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பணத்திற்கு....

# 25%



சிறந்த **வட்டி...**

பாதுகாப்பு

வருமானம்

உத்தரவாதம்

**25%** 2 வருட வைப்புப் பணத்திற்கான கால முதிர்வு வட்டி...

**23%** 2 வருட வைப்புப் பணத்திற்கான மாதாந்த வட்டி...

**21%** 1 வருட வைப்புப் பணத்திற்கான மாதாந்த வட்டி...

## மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிதி நிறுவனம்

122 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8267

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள் 27% வரையுண்டு

| | ரூ. 500க்கு அதிகமான வைப்புக்கு மாதாந்த வட்டி | காலமுதிர்வு வட்டி | 1,00,000 ரூபாய்க்கு அதிகமான தொகைக்கு கால முதிர்வின்போது |
|---|---|---|---|
| 6 மாதம் | — | 15% | 21% |
| 12 மாதம் | 21% | 22% | 23% |
| 24 மாதம் | 23% | 25% | 27% |

இயக்குனர்கள்

1. திரு. ஆர். மகாராஜா (நிர்வாக இயக்குனர்)
2. திரு. ஆர். இராஜமகேந்திரன் (நிர்வாக இயக்குனர்)
3. திரு. வி. என். குமாரசாமி, F.C.A.(Eng. & Wales), ATII (Eng.) M.Inst A.M (Eng.), AMBIM(Eng.), F.C.A.(Cey.)
4. திரு. பி. மகிந்தா B. Sc. (Hons)
5. திரு. வி. சண்முகம் LLB (Lond) Hons. A. I. B. (Lond) சட்டத்தரணி
6. திரு. டி. ஜே. குணவர்த்தன B.Sc., A.C.A., A.C.M.A
7. திரு. டபிள்யு. பண்டாரநாயக்கா MBIM (Eng.)
8. திரு. ச. குணசேகரா

சுருக்கமான தகவல்கள்

| நிதி அறிக்கை | 1977/78 ரூபாய் | 1978/79 ரூபாய் | 1979/80 ரூபாய் |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 4,030 | 250,000 | 250,000 |
| ஒதுக்கிய மூலதனம் | 143,588 | 246,615 | 1,706,147 |
| வைப்பு மூலதனம் | 3,579,820 | 11,325,480 | 22,139,162 |
| இலாபம் (வரிகட்ட முன்) | 181,417 | 667,461 | 2,135,874 |
| இலாபம் (வரிகட்டிய பின்) | 163,918 | 453,777 | 1,635,873 |
| பங்குலாபம் | | 250,000 | 187,500 |

வியாபார நோக்கங்கள்

★ முதலீட்டு வைப்பு
★ கைத்தொழிலாளர்களுக்கு, இயந்திரங்கள், மூலப்பொருள் இறக்குமதிக்கு கடன்வசதி
★ காப்புறுதி முகவர்.

ஸ்தாபகம்: 29-09-1976.
தலைமையகம்: யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
காரியாலயம்: 54, பாங்ஷால் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணே சரணம்

# லக்
# LUCK

எண்ணென்ப ஏனை
எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு


இலங்கையில் வெளியாகும் ஒரேயொரு எண்சோதிட மாத இதழ்.

எண் : 1 மாசி 1982 எழுத்து : 5



ஆசிரியர் :
எண்சோதிட நிபுணர்
**எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்**


## விற்பனை ஓங்கி...

— துர்க்கா —

கற்பனைக் கெட்டாத
கடிதான எண்கலையில்
நற்பணி செய்வதற்கு
நாற்றிசை பரவும் "லக்"
பெற்றது பெருவெற்றி!
பெரியதோர் சாதனைதான்!!
விற்பனை ஓங்கி மக்கள்
விக்கினம் தீர்க்குதய்ய


வெளியீடு :
**அதிர்ஷ்ட நியூமரோலஜி**
**பப்பிளிக்கேஷன்ஸ்**
19, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம்.


## இதய ராகங்கள்...

அன்பு வாசகர்களே!

எண் சோதிடம் என்னும் விஞ்ஞானக்கலை இன்று அநேகரைத் தன்பால் ஈர்த்துள்ளது. அன்றாட வாழ்க்கையில் நாள் — நட்சத்திரம் பார்க்காதவர்கள் கூட திகதி பார்த்து கருமம் ஆற்றுவதை நாம் காணலாம். நம்பிப் பின்பற்றியவர்கள் என்றும் ஏமாற்றம் கண்டதில்லை.

இந்த அற்புதக் கலையினால் வாழ்வில் ஏற்றம் கண்டோர் ஏராளம். திருமணமாகாது இருந்தவர்களுக்கு அதிர்ஷ்டப் பெயர் மாற்றத்தின் பின் திருமணங்கள் தானாகவே வந்து நிகழ்ந்துள்ளன. கஷ்டப் பட்டவர்கள் அநுகூலம் பெற்றிருக்கிறார்கள். தொடர்ந்து தோல்வியையே கண்டவர்கள் பெயர் மாற்றத்தின் பின் வெற்றியை ஈட்டியுள்ளனர்.

எண் சோதிடத்தை ஜனரஞ்சிதமாக்குவதோடு, ஒவ்வொரு வாசகரும் வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளை—மேடு பள்ளங்களை முன்னரே அறிந்து வாழ்வை வளப்படுத்துவதற்குமே மாதம் மாதம் வெளிவருகின்றது லக். இது உங்கள் அபிமான இதழ்! சாதி, சமய, இன பேதங்களுக்கு அப்பாற்பட்டது.

"லக்" இன் குறை—நிறைகளை எழுதி, ஆக்கமும் ஊக்கமும் தாருங்கள்.

வணக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1982 உங்களுக்கு எப்படி?

— வசிட்டமுனி —

[ சென்ற மாதத் தொடர்ச்சி ]

## 7

(7, 16, 25 இல் பிறந்தவர்கள்)

இந்த ஆண்டு உங்களுக்கு இலாபகரமான ஆண்டுதான். இவ்வளவு காலமும் தடைப்பட்டிருந்த கருமங்கள் தாமாகவே வெற்றியைத் தரும். கொடுக்கல்—வாங்கலில் ஏமாற்றப்பட்ட நீங்கள் இவ்வருடம் பாக்கிகள் யாவும் வசூலிக்க வாய்ப்புண்டு. மனஅமைதியில்லாமல் திரிந்த உங்களுக்கு உற்சாகமான காலம். நீதிமன்றத்தில் காலதாமதமான வழக்குகள்கூடச் சாதகமான தீர்ப்பைப் பெறும். மற்றவர்கள் உங்களை முந்திக்கொண்டு போன காலம்போய், இப்பொழுது மற்றவர்களை நீங்கள் முந்துகின்ற காலம். உத்தியோக உயர்வு, கௌரவம், பணச் சேர்க்கை, ஆடை ஆபரண சேர்க்கை என்பன உண்டாம். எனினும் வருடக் கடைசியில் ஒரு வீழ்ச்சிக்கும் இடமுண்டு. கணவன்—மனைவி—குடும்பம் என்ற பிணைப்புக் குதூகலமாகவும், சந்தோஷமாகவும் காணப்படும்.

### உத்தியோகத்தர்களுக்கு :

உங்களுக்கு இவ்வாண்டு சகலவிதத்திலும் அனுகூலமான ஆண்டு. அலுவலகத்தில் நல்ல சூழலும், யாவரினது உதவியும், உயர் அதிகாரிகளின் பாராட்டுதல்களும், அந்தஸ்து உயர்வும், உண்டாகும். எதிர்பாலாரின் ஆதரவும், அன்பும் என்றும் உண்டு. சிலர் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்ளவும் வாய்ப்புண்டு. மனஅமைதியும், நிம்மதியும் உண்டு. உங்களை வெறுத்தவர்கள் கூட வலியவந்து உறவாடுவர்.

### வியாபாரிகளுக்கு :

இந்த வருடம் வியாபார ஸ்தாபனத்தைச் சனம் மொய்த்தபடி இருக்கும். பட்ட கடன்கள் யாவும் தீர்த்துவிடுவீர்கள். தொட்டதெல்லாம் பொன்போல, எவ்வியாபாரத்தையும் விஸ்தரிக்கலாம். நிறைய ஆதாயம் உண்டு. மற்றவர் பொறாமைப்படப்பட நீங்கள் உயருவீர்கள். புதிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கு உகந்த காலம்.

### மாணவர்களுக்கு :

கல்வியில் போதிய முன்னேற்றம் காணப்படும். படிப்பில் என்றுமில்லாத அக்கறை தோன்றும். உற்சாகமும், புத்துணர்வும் தோன்றும். ஞாபக சக்தி வளரும். பரீட்சைகளில் சித்தியும், ஆசிரியர்களின் நன்மதிப்பையும் பெறுவீர்கள். வருட இறுதியில் விபத்து ஒன்று ஏற்படலாம்.

### பெண்களுக்கு :

இல்லச் சிறப்பும், குழந்தைப்பேறும், கன்னியருக்குத் திருமணமும், தொழில் செய்பவர்களுக்குப் பதவி உயர்வு அல்லது சாதகமான இடமாற்றமும் கிட்டும். காணி வாங்க அல்லது வீடுகட்டப் பலன் உண்டு. மனச் சந்தோஷமும், வீட்டில் அடிக்கடி விருந்தும், இனசன சேர்க்கையும் இடம்பெறும். இத்தனைகாலமும் பட்ட கஷ்டம் தீர்ந்து இது ஒரு விடிவு காலமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைஞர்களுக்கு :

உங்களுக்குப் புத்துணர்வு ஏற்படும். பிர பலிக்கமும், பேரும்—புகழும் உங்களைத் தேடி வரும். அதி உன்னதமான பண வருவாயும், புதிய ஆக்கங்களுக்கு ஆதரவும் ஏற்படும். பலரின் பாராட்டுக்களையும் பெறுவீர்கள்.

## விவசாயிகளுக்கு :

நீங்களே எதிர்பார்க்காத அளவு நிலம் அளந்து கொடுக்கும். பசு, மாடு, ஆடு போன்ற வற்றால் இலாபம் உண்டு. தனலாபமும், மேல திக சொத்துச் சேர்க்கையும் ஏற்பட இடமுண்டு. ஊரில் மதிப்பும் மரியாதையும் கூடும்.

அதிர்ஷ்ட மாதங்கள் : பெப்ருவரி, ஏப்ரல், மே, ஆகஸ்ட், செப்ரெம்பர், நவம்பர்.

துரதிர்ஷ்ட மாதங்கள் : யூன் (பிறந்த திகதி, மாதம், வருடம் கூட்ட வரும் கூட்டு எண் 1, 2, 6, 7ஆயின் கூடிய நன்மையும், 3, 6, 8 ஆயின் தீமை கலந்தும் இருக்கும்.)

# 8

(8, 17, 26 இல் பிறந்தவர்கள்)

1982ஆம் ஆண்டு 8 எண்களுக்கு அவ்வளவு உகந்ததல்ல. மனச் சஞ்சலமும், அலைச்சலும் கூடிய வருடம். நீங்கள் எதையோ நினைத்துக் கொண்டிருக்க, அது ஏதோவாக நடந்துமுடிந்து விடும். பண வருவாய் இருந்தாலும், கடன்பட வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். உறவினர் களிடம் வீண் மனஸ்தாபம் ஏற்படவும் வாய்ப் புண்டு. ஆயினும் நண்பர்களின் உதவி நன்மை பயக்கும். வாழ்வில் தாழ்வும் – உயர்வும் மாறி மாறி வரும், பிரயாணக் கஷ்டமும். பிரயாணத் தின்போது பொருள் கைநழுவவும் ஏற்பட இட முண்டு. கணவன்—மனைவிக்கிடையில் அடிக்கடி சண்டைகள் தலைதூக்கினாலும், அமைதி குன்றாது. பிள்ளைகளினால் நன்மை உண்டு. வெளிநாட்டுப்போக எத்தனிப்பவர்கள் பல தடங்கல்களுக்கூடாகக் காரியம் கைகூடும். யாரையும் நம்பி நடவா திருத்தல் நல்லது. சிலருக்குப் பூமி, வாகனச் சேர்க்கை சாதகமான மாதங்களில் ஏற்படவும் வாய்ப்புண்டு.

## உத்தியோகத்தர்களுக்கு :

உங்களுக்கு மத்திம பலனையே இந்தவருடம் எதிர்பார்க்கலாம். காரியாலயத்தில் அந்தஸ்தும், கௌரவமும் நிலைத்திருந்தாலும், சிலர் வஞ் சனைக்கு ஆளாகவேண்டிய பலனும் உண்டு. ஒவ் வொரு அடியையும் மிக்க கவனத்தோடு எடுத்து வைக்கவும். சிலருக்குத் தண்டனை இடமாற்றம் கூடக் கிடைத்தால் ஆச்சரியப்படத் தேவையில்லை.

## வியாபாரிகளுக்கு :

உங்களுக்கு இலாப நட்டம் இல்லாத கால மாகும். ஆயினும் யாருக்கும் கடன் கொடுக்கா திருத்தல் நன்று. கொடுத்த கடன் திரும்பிவராது. கோடேறவேண்டிய பலனும் உண்டு. புதிய வியா பார விஸ்தரிப்பிற்குச் சாதகமான மாதங்களைப் பயன்படுத்தவும், மனதைக் கட்டுப்படுத்தி, பொறு மையோடு செயலாற்றினால் வருட இறுதியில் வெற்றியடையலாம்.

## மாணவர்களுக்கு :

உங்களுக்கு வீணான விடயங்களில் சிக்க வேண்டிய காலம். எதிர்பாலாரின் தொல்லைக் கிடமுண்டு. படிப்பில் மனதைச் செலுத்தி, அநாவசிய விடயங்களில் தலையிடாது இருத்தல் நன்று. ஆண்டிறுதியில் நிலைமை சுமுகமாகும்.

## பெண்களுக்கு :

நீங்கள் வீண் வம்புகளில் மாட்டிக்கொள்ள நேரிடும். எப்பொழுதும் நாவடக்கம் நல்ல பயன் தரும். குடும்பசுகம் இருப்பினும் அடிக்கடி மனச் சஞ்சலம் ஏற்படும். இனசன விரோதமும், நண்பர்கள் சகாயமும் கிட்டும். திருமணங்கள் தடைப்பட்டுப் பின்னர் நிறைவேறுதலும், சிலருக்குக் கர்ப்பச் சிதைவும் உண்டாக இடமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கலைஞர்களுக்கு :

உங்களுக்குச் சோதனையோடு வேதனையும் கலந்துள்ள காலம், உங்கள் ஆக்கங்களுக்குப் பவிசு இல்லாது போய்விடும். மனச் சோர்வும், ஏமாற்றமும் ஏற்படும். பார்த்தவர்கள் என்ன குறை என்று கூறினாலும், மனதில் எத்தனையோ போராட்டங்கள் இருக்கத்தான் செய்யும்.


### விவசாயிகளுக்கு :

உங்களுக்குப் பயிர்ச்சேதம், தொழில் பலிதமின்மை, வீண் பணவிரயம், வாகனாதிகளினால் இலாபம் முதலியன ஏற்படும். குடும்பத்தில் பிரச்சினைகள் தலைதூக்கி, பின்னர் அமைதி பெறும். உழுந்து முதலியனவற்றில் சிறிது இலாபம் ஏற்படும்.

அதிர்ஷ்ட மாதங்கள் : மார்ச், ஏப்ரல், யூலை, டிசெம்பர்.

துரதிர்ஷ்ட மாதங்கள் : யூன், ஆகஸ்ட்.

(பிறந்த திகதி, மாதம், வருடம் கூட்ட வரும் கூட்டு எண் 3, 6, 8, 9 ஆயின் மேற்கூறிய பலனும், 1, 2, 4, 5, 7 ஆயின் நற்பலனையும் செய்யும்.)



(9, 18, 27 இல் பிறந்தவர்கள்.)

உங்களுக்கும் இவ்வாண்டு திறமையானதாக இல்லை. வருவாய் பெருகினாலும், கடனுக்குமேல் கடன்பட நேரிடும். எவ்வளவுதான் மற்றையோருக்கு உதவி செய்யினும் கேட்பது தீமையே. உங்களுடன் இருந்து உறவாடிக் கெடுக்கவும் ஆள் உண்டு. செல்வாக்கும், அந்தஸ்தும் ஒருபோதும் குன்றாது. சம்பவங்கள் காலதாமதப்பட்டே நடக்கும். கணவன்—மனைவி உறவு சுமுகமாக இருக்கும். வழக்குக்களில் மாறி மாறி வெற்றியும் தோல்வியும் ஏற்படும். சம்பள உயர்வு, காணி பூமி சேர்க்கை, வாகனாதி சேர்க்கை, புதுமனைப் பிரவேசம் போன்றவை நடைபெற்றாலும், விபத்துக்களில் இருந்து தப்புவது கடினம். மோசமாக இல்லாவிடினும் விபத்து நடந்தே தீரும். கொடுக்கல் – வாங்கலில் உசாராக இருக்கவேண்டும். குழந்தைகளால் நல்ல பலனை அனுபவிக்கவும் இடமுண்டு. தொழில் துறைகளில் மந்தகெதி முன்னேற்றமும், அதிகமான பிரயாணங்களும் ஏற்பட்டு மனதைத் தளரச் செய்யும். இறை வணக்கத்தால் பெரிதும் விமோசனம் கிட்டும்.

### உத்தியோகத்தர்களுக்கு :

உங்களுக்குக் காரியாலயத்தில் எவ்வளவு செல்வாக்கு இருந்தாலும், வஞ்சிக்கப்படவும் வாய்ப்புண்டு. சக ஊழியரின் உதவி என்றும் உண்டு. வேலைப்பழு உடலைச் சோரவைக்கும். எதிர்பாலாரின் தொந்தரவும், அவமானமும் சிலருக்கு ஏற்பட இடமுண்டு. நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் கடிதம் காலதாமதத்தோடு வரலாம். ஆனால் எதிர்பார்த்த பலன் இல்லை. மௌனமே சிறந்த பரிகாரம்.

### வியாபாரிகளுக்கு :

உங்களுக்கு நட்டமும், கடன் தொல்லையும் வீண் வழக்குகளும் வந்துசேரும். போட்டியிலும், பொறுமையாலும் மனம் தளர்ந்துவிடுவீர்கள். நண்பர்களால் ஏமாற்றப்படவும் இடமுண்டு. வருட இறுதியில் படிப்படியாக நன்மையுண்டு. வியாபாரத்தை விஸ்தரிக்கும் எண்ணத்தை இந்த வருடம் கைவிடவும்.

### மாணவர்களுக்கு :

படிப்பில் மனமே செல்லாது. கல்வியென்பது வேப்பங்காய்போல் கசக்கும். மனம் வேறு புலன்களில் செல்லும். மிக எச்சரிக்கையாய் இருந்து, மனக்கட்டுப்பாடாக நடந்தால் ஆண்டிறுதியில் சுகமுண்டு. சிலருக்கு விபத்துக்களில் சிக்கவும் வாய்ப்புண்டு.

### பெண்களுக்கு :

மனம் ஒருநிலையில் நிற்காது. வீட்டில் இருப்பது பிடிக்காது. சதா வெளியில் செல்லவே மனம் உந்தும். உற்றார் உறவினரின் பகையைச் சம்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்துக்கொள்வீர்கள். யாரையும் நம்ப வேண்டாம். உங்களோடு உறவாடிக் கெடுப்பதற்குப் பலர் உண்டு. காதலில் தோல்வி, திருமணம் தடைப்படல், குடும்பத்தில் சச்சரவு போன்றவை நிகழும். கார்த்திகைக்குப்பின் நிலைமை சீராகும்.

### கலைஞர்களுக்கு :

உங்கள் ஆசைகள் யாவும் நிராசையாகி விடும். பிரயாசைக்கு ஏற்ற பலன் கிட்டவேகிட்டாது. மன அமைதி குன்றும். புதிய ஆக்கங்கள் செய்யாது இருத்தல் நன்று. வரவுக்கு மிஞ்சிய செலவும், உடல் நோயும் காணப்படும். நீங்கள் உதவி செய்தவர்கள்கூட உங்களை உதாசீனம்செய்வர். பொறுமையைக் கையாண்டால், பாதகத்தில் இருந்து சிறிதளவு விடுபடலாம்.

### விவசாயிகளுக்கு :

தோட்டம், வயல் உங்களை ஏமாற்றிவிடும். அயலவரோடு வீண் விவாதமும், மாடு, கன்று இழப்பும் ஏற்படும். பணநெருக்கடி ஏற்பட்டுக் கடனுக்குமேல் கடன்பட இடமுண்டு.

அதிர்ஷ்ட மாதங்கள் : ஜனவரி, ஏப்ரல், யூலை, அக்டோபர்.

துரதிர்ஷ்ட மாதங்கள் : பெப்ருவரி, மே, யூன், ஆகஸ்ட், செப்ரெம்பர், நவம்பர்.

(பிறந்த திகதி, மாதம், வருடம் கூட்ட வரும் கூட்டு எண் 8, 3 ஆயின் மேற்கூறிய பலனுடன் கூடுதலாக தீய பலனும், 1, 2, 4, 7 ஆயின் நற்பலனும் செய்யும்.)

---

# மண மேடை

(மணமகன்—மணமகள் பிறந்த திகதி, முகவரி, தொழில், சம்பளம், குடும்பம், சீதனம் (ரொக்கம், வீடு வளவு, நகை, வேறு ஆதனம்) போன்ற சகல விபரங்களோடு ரூபா 10/—க்குப் போஸ்ரல்ஓடரும் அனுப்பி வைத்தால், இப்பகுதியில் பிரசுரிப்போம். கிடைக்கின்ற பதில்களுள் பொருத்தமானவற்றைத் தெரிந்து அவரவருக்கு அனுப்பிவைத்து, திருமணம்வரை உதவிசெய்வோம். உங்கள் முகவரி பிரசுரிக்கப்படமாட்டாது.)

### இல. 4. பெண்

பிறந்த திகதி : 24-4-1957.

அவிட்டம் 3—ம் பாதம், 2-ல் செவ்வாய்.

தொழில் இல்லை. இந்து வேளாண் மரபைச் சேர்ந்த இப்பெண்ணுக்கு நல்ல குடும்பத்து, உத்தியோக மாப்பிள்ளை தேவை, 6 பரப்பு வீடு வளவு ரூபா 1,50,000/-. ரொக்கமாக ரூபா 50000/- தோட்டக்காணி 12 பரப்பு. தாராளமான நகை. விரும்பியவர் உடன் தொடர்பு கொள்ளவும்.

### இல. 5. ஆண்

பிறந்த திகதி : 17-6-1950.

தொழில் பயிற்றப்பட்ட ஆசிரியர்

இஸ்லாம் மதத்தைச் சார்ந்த இவருக்கு, அழகான பெண்ணும், வீடுவளவு, காசு இனமாக ரூபா 50,000/-, சீதனமாக 50,000/- நகையும் உடைய நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை.

### இல. 6. பெண்

பிறந்த திகதி : 16-8-1955.

8-ல் செவ்வாய்.

நல்ல வேளாண் மரபைச்சேர்ந்த பெண்ணுக்கு வீடு வளவு ரூபா 2,50'000/-, ரொக்கமாக ரூபா 75,000/-. நகையும் கொடுக்கப்படும். நல்ல குடும்பத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப உதவியாளர். பட்டதாரி ஆசிரியர், போன்ற உத்தியோக மணமகன் தேவை.

### நற்செய்தி :

சென்ற இதழில் வெளியான இல 2. மணமகனுக்கு 16 பதில்கள் கிடைத்தன. அவற்றில் பொருத்தமான 9-ம் எண் மணமகளைத் தெரிவு செய்து சென்ற 22-01-82 இல் அவர்களுக்கு பதிவுத் திருமணம் எமது உதவியால் நடந்தேறியது. வாழ்க மணமக்கள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண் கலையில்

# ஆரூட சாஸ்திரம்

— தில்லைக் கூத்தன் —

ஒருவர் வந்த நேரத்தைக் கொண்டும், கேள்வி நேரத்தைக் கொண்டும் கணக்கிட்டுக் கிரகங்களைச் சோதித்துப் பலன் கூறுவதே ஆரூட சாஸ்திரமாகும். இதேபோன்று பலன்கேட்க வந்தவரை 108-க்குள் ஏதாவதொரு எண்ணைக் கூறும்படி சொல்லவும். அவர்கூறிய எண்ணை 9 ஆல் வகுக்கவும். மீதி எவ்வளவு வருகிறதோ அந்தஎண்ணைக் கொண்டு, அன்று நிகழும் கிழமையின் பகல்—இரவு அறிந்து, அதற்குண்டான பலனை எடுத்துச் சொல்லவும். இத்தொடர் கட்டுரையை சேர்த்து வைத்துக் கொண்டால், ''லக்'' வாசகர்களாகிய நீங்களும் ஆரூடம் கூறலாம்.

( தை இதழ் தொடர்ச்சி )

## திங்கட்கிழமை இரவு.

1. காரியங்கள் தாமதமடையும். கையில் கிடைத்த வேலையை இழக்கவேண்டாம். பொறுமையுடனிருப்பின் இன்னும் நாலுவாரத்தில் வெற்றியுண்டு. கைசோர்ந்த பொருளும், காணமற்போன கால்நடைகளும், தேடாமல் வந்து சேரும். கோபித்துக்கொண்டு போனவர்களும், மேற்குத்திசையில் கிடைப்பார்கள். கொடுத்த கடனைத் திரும்பப் பெறுவது கடினமாகும்.

2. குடும்பத்தில் சஞ்சலமேற்பட்டு மனோவியாகூலமுண்டாகும். மாதர்களால் அதுவும் வயோதிகப் பெண்மணிகளால் கலகமேற்படும். அவசர வார்த்தைகளுக்கும் அவசர முடிவுகளுக்கும் இடந்தரலாகாது. சகோதரர்களால் வீண் மனஸ்தாபம் உண்டாகும். பாரத்தை சுமத்திவிட்டு நழுவிவிடுவர். பொறுப்பு அதிகமாகும். கடன்தொல்லை ஏற்படும். முக்கியமான கட்டத்தில் பெரியோர்களை கலந்து ஆலோசிக்காமல் காரியத்தில் பிரவேசிக்கவேண்டாம்.

3. எதிரிகளின் பலம் குறையும். வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு. எதிரிகள் முன் கூட்டியே சமாதான உடன்பாடுகளுக்கு இசைந்து நெருங்குவர். எண்ணிய காரியங்கள் நான்கு வாரங்களில் சித்தியாகும். கூட்டாளிகளால் நன்மையுண்டு. செய்துவரும் தொழில் அபிவிருத்தி யாகும். பெரியோர் ஆதரவு ஏற்படும். கவலைகள் மறையும்.

4. விவசாயத்துறையில் நல்ல பலிதம் கிட்டிடும். பூமி சேர்க்கையும் உண்டாகும். சகல சம்பத்தும் பெருகும். பெண்களால் நல்ல சாதகப் பலன்கள் ஏற்படும். வழக்குகளில் ஜெயமேற்படும். தொழில் உயர்வடையும். வியாபாரத்தில் மூலநிதி பெருகிடும். உயர்ந்தலாபம் ஏற்படும். குடும்ப விருத்தியும் சந்தான விருத்தியும் ஏற்படும். வாழ்க்கையில் புதிய வசதிகள் நன்கு அமையும்.

5. சந்தோஷகரமான செய்தி செவிக்கெட்டுவதால் மனக்கவலையகன்று களிப்புண்டாகும். விரும்பிய விவகாரங்கள் விருப்பத்தின்படியே நிறைவேறிடும். நேசித்த மங்கையின் பாசம் நெருங்கிட இல்லற வாழ்க்கையும் ஏற்படும். திருமணப் பேச்சு வார்த்தைகள் முடிவுற்று நல்ல ஒப்பந்தங்கள் நிச்சயமாகும். வீடு வாகன பிராப்தியும் ஆடம்பர வசதியும் உண்டாகும். கலைத் துறையில் வெற்றியேற்படும்.

6. கஷ்டமும் நஷ்டமும் வலியவந்து சேரும். நிராப்பகை யுண்டாகும், அபகீர்த்தி யுண்டாகும். எதிரிகளால் என்ன நேரிடுமோ என்ற மிரட்சிகரமான தோற்றமேற்படும். சோர பயமும், மறதியால் கைப்பொருள் சோர்வும் எதிர்பாரா வகையில் திடுக்கிடும்படி செய்யும். எச்சரிக்கை மிகவும் அவசியம். புதிய நண்பர்களிடத்தில் அதிக நம்பிக்கை வைக்கலாகாது. அரசாங்க பயமேற்படும்.

( தொடர்ச்சி 10-ம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(இப்பகுதியில் பெயர் மாற்ற விரும்பும் வாசகர்கள் தங்களின் பிறந்த திகதி, ஆங்கிலத்தில் பெயர், தந்தை—பேரன்—பூட்டன் பெயர்கள் ஆதியவற்றைச் சுருக்கமாக எழுதி, விலாசக் கூட்டோடும், குறைந்தது அரையாண்டுச் சந்தாவோடும் அனுப்புதல்வேண்டும். விலாசக்கூடும், அரையாண்டுச் சந்தாவும் இல்லாத கடிதங்களுக்குப் பதில் கொடுக்கப்பட மாட்டாது. பலர் விலாசக் கூட்டோடு மட்டும் எழுதியுள்ளார்கள். மன்னிக்கவும்.)

**பெ. முருகேசு,**
வத்தேகம.

எனது பிறந்ததிகதி 6–1–1959. எனது பெயர் P. MURUGESH. தகப்பன் பெயர் மு. பெரியசாமி. எனது பெயரை அதிர்ஷ்டமாக மாற்றித்தரவும். புதிய தொழில் ஆரம்பிப்பதாயின் எப்படி ?

★ உங்கள் பிறப்பெண் 6 ஆகவும், கூட்டெண் 4 ஆகவும் இருப்பதால், பெயர் பொருத்தமானதே. ஆயினும் தமிழில் முருகேசு என்ற பெயரே வழக்கில் உள்ளது. அப்படியாயின் P. MURUKESU எனவும் 42 இல் வைக்கலாம். பெயர் அதிர்ஷ்டமாக இருந்தால் மட்டும் பலன் செய்யாது. 6-ம் எண்ணின் சக்தியைப் பெருக்குவதற்கு வாயினால் உரக்க எழுத்தெழுத்தாக உச்சரித்து, உச்சரித்து பெயரை தினமும் 105 தரமாகுதல் எழுதிப் பயிற்சி செய்யவும். அத்துடன் அதிர்ஷ்டக் கல்லான மரகதப்பச்சை அல்லது ஜேட் அல்லது இந்திரநீலம் பதித்த மோதிரம் அணியவும். புதிய தொழிலுக்குப் பெயர் வைக்கும்போது, பெயர் எண் 6 வர வைத்தலே சிறப்பாகும். தாங்கள் தொழில் விருத்திபெற்று, சிறப்புடன் வாழ வேண்டுமென எல்லாம் வல்ல கண்ணனைப் பிரார்த்திக்கிறேன்.

**திருமதி ச. புஸ்பராணி,**
சுதுமலை, மானிப்பாய்.

எனது பிறந்ததிகதி 5–8–1941. எனது பெயரை S. PUSPARANE என மாற்றியுள்ளேன். எனது கணவரின் பிறந்ததிகதி 26–7–1939. அவரது பெயரை P. SATCHITHANANDAM எனவும், 29–4–1967–ல் பிறந்த மூத்தமகனின் பெயரை S. SATHEESKUMARR எனவும், 14–12–1969 இல் பிறந்த இளையமகனின் பெயரை S. JEYACUMAR எனவும் மாற்றியுள்ளோம். இது சரியா ?

★ உங்கள் பிறப்பெண் 5 ஆகவும், கூட்டெண் 1 ஆகவும் இருப்பதால், பெயர் 6 இல் அமைவது அதிர்ஷ்டமில்லை. ஆகையால் உங்கள் பெயரை அதிர்ஷ்டமாகS. PUSSPA RANI என 41 இல் வைத்துள்ளேன். உங்கள் கணவரின் பிறப்பெண் 8 ஆகவும், கூட்டெண் 1 ஆகவும் இருப்பதால் அவரின் பெயரை P. SACHCHIDANANTHAM என 59 இலும், மூத்தமகனின் பெயரை S. SATHEESCUMAAR என 46 இலும், இளையமகனின் பெயரை S. JAYACUMAR என 23 இலும் அமைத்துள்ளேன். நீங்கள் நால்வரும் உரக்க உச்சரித்து எழுத்தெழுத்தாக, அதிகாலையில் எழுதிப் பயிற்சிசெய்ய வேண்டும். நீங்களும், கணவரும், இளைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனும் வைரம், அல்லது சேர்க்கன் பதித்த மோதிரம் அணியவேண்டும். மூத்தமகன் மஞ்சள் புஸ்பராகம் அல்லது மஞ்சள் வைரம் அல்லது கருநீலம் பதித்த மோதிரம் அணிய வேண்டும். கல்மோதிரம் அணியாவிடில், எழுத்துப் பயிற்சியை அதிகம் தொடர்ச்சியாக செய்யவேண்டும். உங்கள்குடும்ப நலத்திற்கும், சிறப்பிக்கும் லீலா விநோதனை கண்ணனைப் பிரார்த்திக்கிறேன்.

## க. ராஜேந்திரன்,

8/1, கிரிலப்பனை அவனியூ,
கொழும்பு—5.

எனது பிறந்ததிகதி 10-8-1957. எனது பெயரை தற்பொழுது K. RAJENDRAN என வைத்து, தினமும் பயிற்சி செய்கிறேன். ஆனல் பலன் எதுவும் இல்லை. எனவே தயவு செய்து பெயரை அதிர்ஷ்டமாக மாற்றி உதவவும்.

★ உங்கள் பிறப்பெண் 1 ஆகவும், கூட்டெண் 4 ஆகவும், பெயர்எண் 28 ஆகவும் இருப்பது பொருத்தமற்றதே. அத்தோடு பெயரில் முதலெழுத்தைக் கழித்தால் 8 வருகின்றது. எனவேதான் உங்களுக்குப் பலன் செய்யவில்லை. உங்கள் பெயரை அதிர்ஷ்டமாக C. RASENTHIRAN என 37 இல் வைத்து (தந்தையின் பெயர் கந்தசாமிக்கு 'சி' ஐ முதலெழுத்தாகக் கொள்ளவும்) தினமும் 100 முறையாகுதல் எழுத்தெழுத்தாக வாயினல் உச்சரித்து உச்சரித்து எழுதி, அதிர்ஷ்டக் கல்லான மஞ்சள் புஸ்பராகம் அல்லது மஞ்சள் வைரம் அல்லது கருநீலம் பதித்த மோதிரமும் அணிந்தால், நிச்சயம் அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் திரும்பும். உங்கள் ஒளிமயமானஎதிர்காலத்திற்காக சர்வலோக நாயகனை கண்ணனை வேண்டுகிறேன்.

## பி. எஸ். தருமராஜா,

பெரிய நீலவாணை,
கல்முனை.

எனது பிறந்ததிகதி 26-8-1933. பின்னிரவு 1 மணி 20 நிமிடம். என்னுடைய முழுப்பெயர் PODISINGHO LOWRENCE THARUMARAAJAH. எனது வழமையாகப் பாவிக்கும் பெயர் P. L. THARUMARAAJAH. என்பதாகும். எனது குறைகள் தீருமா? தயவுசெய்து புத்தி கூறுங்கள்,

★ நீங்கள் பின்னிரவு 1 மணி 20 நிமிடத்திற்குப் பிறந்தபடியால் உங்கள் பிறந்த திகதி 27-8-1933 ஆகும். எனவே உங்கள் பிறப்பெண் 9 ஆகவும், கூட்டெண் 6 ஆகவும் இருக்கிறது. அத்துடன் உங்கள் பெயர் அதிர்ஷ்டமாகவும் அமைந்துள்ளது (45இல) எனவே எழுத்தெழுத்தாக தினமும் அதிகாலையில் உரக்க வாயினல் உச்சரித்து உச்சரித்து 108 முறையாகுதல் எழுதிப் பயிற்சி செய்து, அதிர்ஷ்டக்கல்லான சிவப்புக்கல், அல்லது பவளம், அல்லது மாணிக்கம் தோலில் முட்டும்படி பதித்த மோதிரமும் அணியுங்கள். சிலமாதங்களின் பின்னர் பாருங்களேன். உங்கள் தொழில் பிரச்சினை நீங்கி சந்தோச வாழ்வு வாழ வேண்டுமென ஆண்டவனை வேண்டுகிறேன்.

## இ. கோணேஸ்வர சிங்கம்,

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

நான் 18-5-1962—ல் பிறந்தேன். நான் சின்னவயதில் இருந்து மிகவும் கஸ்டப்படுகிறேன். எனது தந்தையின் பெயர் சி. இராசசிங்கம். எனதுபெயரை R. KONESWARA SINGAM என்றே பாவித்து வருகிறேன். லக் என்னைப் போன்ற மக்களின் சொத்து. அதைக் கண்டதில் இருந்து உங்களை ஓர் தெய்வமாக நினைத்து வருகிறேன். எனது வாழ்விற்கு உதவிசெய்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

★ உங்கள் பிறப்பெண் 9 ஆகவும், கூட்டெண் 5 ஆகவும் இருப்பதால் பெயரை அதிர்ஷ்டமாக R. KONESWARASINKAM என 50 இல் வைத்து, ஒவ்வொருநாளும் வாயினல் உரத்து எழுத்தெழுத்தாக உச்சரித்து உச்சரித்து 104 முறையாகுதல் எழுதிப் பயிற்சி செய்யவும். 5-ம் எண்ணின் பூரண ஆதிக்கத்துள் வருவதற்கு அதிர்ஷ்டக்கல்லான வைரம் அல்லது ஷேர்க்கன் பதித்த மோதிரம் அணியுங்கள். உங்கள் துன்பங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் யாவும் நீங்கி, நல்ல வாழ்வு கிட்ட வேண்டுமென காக்கும் தெய்வமாம் கண்ணனை வேண்டுகிறேன்.

**எஸ். எல். அபூபக்கர்,**
நற்பிட்டிமுனை,
கல்முனை.

நான் பிறந்த திகதி 19-10-1948. நான் மிகவும் கஷ்டம் அடைகிறேன். எனக்கு ஒரு தொழில்கூட இல்லை. தந்தையின் முழுப்பெயர் ரி. சின்னலெவ்வை. எனது பெயரை முன்பு **S. L. ABUBACKKER** எனவும், தற்பொழுது **S. L. ABOOBAKKER** எனவும் எழுதி வருகின்றேன். இதில் எது அதிர்ஷ்டமானது?

★ உங்கள் பிறப்பெண் 1 ஆகவும், கூட்டெண் 6 ஆகவும் இருப்பதால் முன்பு எழுதிய பெயர் (5-ல்) பொருந்தாது. தற்பொழுது பாவிக்கும் பெயர் 37 இல் இருப்பது அதிர்ஷ்டமானதே. சிலவேளை 1 இன் வலிமை குன்றிய நிலையில் இருக்கலாம். எனவே உங்கள் பெயரின் எழுத்துக்களை (இனிசலோடு சேர்த்து) வாயினால் உச்சரித்து எழுதிப் பயிற்சி செய்து, அதிர்ஷ்டக் கல்லான மஞ்சள் புஷ்பராகம் அல்லது மஞ்சள் வைரம் அல்லது கருநீலம் பதித்த மோதிரம் அணியுங்கள். அதிர்ஷ்டம் உங்களைத்தேடி வரும். நீங்கள் சர்வ செல்வங்களோடும் வாழ வேண்டுமென இறைவனை வேண்டுகிறேன்.

**சொ. கமலநாதன்,**
கரன் கோப்பிபார்,
கண்டி வீதி,
கிளிநொச்சி.

எனது பிறந்ததிகதி 4–1–1950. எனது தகப்பனார் பெயர் நா. சொக்கலிங்கம். இப்பொழுது எனதுபெயரை **S. GAMALANATHAN** என்றே பாவிக்கிறேன். இது சரியா? தங்கள் லக் இதழில் எனது பிறந்த திகதிக்குக் கூறியிருக்கும் சாஸ்திரம் என்னால் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

★ உங்கள் பிறப்பெண் 4 ஆகவும், கூட்டெண் 2 ஆகவும் இருப்பதால் பெயரை 1 இல் தான் வைக்கவேண்டும். ஆனால் நீங்கள் வைத்திருக்கும் முறையிலும் பார்க்க **S. CAMALANATAN** அல்லது **S. KAMALANAATHAN** எனப் பாவிப்பது பெயரின் உச்சரிப்பிற்கு உகந்ததாய் இருக்கின்றது. எனவே இதில் ஒரு பெயரைத் தெரிந்து, தினமும் அதிகாலையில் எழுத்தெழுத்தாக வாயினால் உரக்க உச்சரித்து உச்சரித்து 100 தரமாகுதல் எழுதி, அதிர்ஷ்டக் கல்லான மஞ்சள் புஷ்பராகம், மஞ்சள் வைரம் அல்லது கருநீலம் பதித்த மோதிரமும் அணியுங்கள். இப்படிச் செய்துவர கஷ்டங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்துவிடும். நீங்கள் பிறந்தது 4-ந் திகதியே. உங்கள் வழ்வு சிறப்புற வேண்டுமென மாயவனை கண்ணனைப் பிரார்த்திக்கிறேன்.

**எஸ். ஆர். கணேசன்,**
கோடன் எஸ்டேட்,
உடப்புசல்லாவ.

எனது பிறந்ததிகதி 10–8–1951. எனது பெயரை **S. R. GANESHAN** என்று எழுதுகிறேன். எனக்கு **RAMANY** என்ற பெயரும் உண்டு. எல்லோரும் இப்பெயரிலேயே அழைப்பார்கள். அதனால்தான் ரமணியின் முதலெழுத்தையும் சேர்த்து பெயரை எழுதுகிறேன். தந்தை பெயர் ஏ. கே. சின்னையா. எனதுபெயரை எப்படி எழுதலாம்?

★ உங்கள் பிறப்பெண்ணும், கூட்டெண்ணும் 1 ஆக இருப்பதால், பெயரை அதிர்ஷ்டமாக **K. S. KANESHUN** என 37 இல் வைத்து, தினமும் உச்சரித்து எழுதி அதிர்ஷ்டக்கல் மோதிரமும் அணிந்தால் சில மாதங்களில் 1-ம் எண்ணின் பூரண ஆதிக்கத்துக்குள் வந்துவிடலாம். பின்பு வாழ்வு சிறக்கும். ரமணி என்ற கூப்பிடும் பெயரை எழுத்துப் பெயருக்குள் சேர்க்க முடியாது. அப்படிக் கூப்பிடலாம். **RAMANIE** எனப் பார்க்கும் போது 19 வருவது அதிர்ஷ்டமே. நீங்கள் சர்வ ஐஸ்வரியங்களோடும் வாழ முரளி கானனான கண்ணனை வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம். யூ. லூர்த்துசாமி,

அஞ்சலகம்,
ஹட்டன்.

எனது பிறந்ததிகதி 13–12–1959. எனது முழுப்பெயர் ஆங்கிலத்தில் **M. UTHIRIYALOOR THUSAMY.** ஆனால் நான் தற்பொழுது எனது பெயரை **M. U.LOORTHUSAMY** எனப் பாவிக்கிறேன். எனது பெயரை எப்படி வைக்கலாம் ?

★ உங்கள் பிறப்பெண்ணும், கூட்டெண்ணும் 1 ஆக இருப்பதால், பெயரை அதிர்ஷ்டமாக **M. U. LURTHUSAAMY** என 46–ல் வைத்து, உச்சரித்து எழுதி, அதிர்ஷ்டக்கல்லான மஞ்சல் புஷ்பராகம், மஞ்சள் வைரம் கருநீலம் பதித்த மோதிரமும் அணியுங்கள். இப்படிச் சில மாதங்கள் செய்துவர உங்களுக்கே மாற்றம் தெரியும். உங்கள் நல் வாழ்வுக்காக ஆண்டவனிடம் மன்றாடுகிறேன்.

## ஆ. வீரபத்திரப்பிள்ளை,

பூரிதவல,
அலுவிகார (மாத்தளை)

எனது பிறந்ததிகதி 17–06–1945. எனது பெயர் ஆங்கிலத்தில் **A. VEERABADRAPILLAI.** மனைவியின் பிறந்த திகதி 2-12-1945. பெயர் **V. MALATHIE.** தயவுசெய்து நன்கு பார்த்து எம் வாழ்வு வளம்பெற, தொழில் விருத்திபெற வழி செய்து தரவும்.

★ உங்கள் பிறப்பெண் 8 ஆகவும், கூட்டெண் 6 ஆகவும் இருப்பதால் பெயரை அதிர்ஷ்டமாக **A. VEERAPATHIRAPILLAI** என 59 இல் வைத்து, எழுதிப் பயிற்சி செய்து அதிர்ஷ்டக்கல்லான வைரம் அல்லது ஷேர்க்கன் பதித்த மோதிரம் அணிந்துவரவும். உங்கள் மனைவியின் பிறப்பெண் 2 ஆகவும் கூட்டெண் 6 ஆகவும் இருப்பதால் **V. MAALLATY** என 24 இல் வைத்து, உச்சரித்து எழுதிப் பயிற்சி செய்து, அதிர்ஷ்டக்கல்லான மரகதப் பச்சை அல்லது அல்லது ஜேட் அல்லது இந்திர நீலம் பதித்த மோதிரம் அணிந்துவர சகல துன்பங்களும் நீங்கி வாழ்வு சிறக்கும். உங்கள் வாழ்க்கை வளம்பெறவேண்டுமென அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகனை கண்ணனைப் பிரார்த்திக்கிறேன்.

இம்முகவரியை ஒட்டி அனுப்புக.

S. C. S. CHITHAMBARANATHAN
EDITOR "LUCK"
19, CHAPEL STREET,
JAFFNA.

---

( 6-ம் பக்கத் தொடர்ச்சி )

7. செய்துவரும் தொழிலில் பிற்போக்கான சூழ்நிலை ஏற்பட்டு மனச் சஞ்சலமுண்டாகும். எதிரிகளால் தொல்லையுண்டாகும். வியாபாரத்தில் நஷ்டமேற்படும். திருஷ்டி தோஷமும் தாக்கிடும். திருஷ்டி பரிகாரம் செய்து கொள்வது நல்லது. அரசாங்க தண்டனையும் அபகீர்த்தியும் எதிர்பாரா வகையில் நேரிடக்கூடும். முன்னெச்சரிக்கை மிகவும் அவசியம்.

8. கெட்ட நேரம் சரியில்லை. மனக்குழப்பமுண்டாகும். காரியம் வெற்றியடைவது கடினம். தேடியபொருள் சேதமாகும். கைசேர்ந்தது கிடைப்பது அரிதாகும். சித்தப்பிரமை பிடித்தது போன்ற பாவனை யுண்டாகும். தொழிற்துறையிலிருந்து சிலகாலம் ஓய்வு பெற்றுக் கொள்வது சாலச் சிறந்தது. உடற்பிணியும் தோன்றி மறையும்.

9. நினைத்தகாரியம் சித்தியாகும். வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு. சாட்டிய பழிக் குற்றங்கள் தவறென தள்ளுபடி செய்யப்படும். தொழில் உயர்வு உண்டு. வியாபாரத்தில் மிகுந்த லாபமேற்படும். செல்வம் செழிக்கும். பெரிய மனிதரால் நல்லாதரவு நிலைத்து முயன்ற காரியங்களில் சாதகமான பலன்கள் கிட்டிடும். அதிகாரிகளால் நல்ல சலுகைகள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத பலன்

— வசிட்டமுனி —

**13-2-82 முதல் 14-3-82 வரை**

## 1

( 1, 10, 19, 28-ல் பிறந்தவர்கள் )

இம்மாதம் 1-ம் எண்காரர்களுக்கு மிகவும் அதிர்ஷ்டமான மாதமாகும். நீங்கள் சென்ற மாதம் அனுபவித்தகஷ்டங்கள்—துன்பங்கள் இம் மாதம் சூரியனைக்கண்ட பனிபோல விலகிவிடும். நீங்கள் நினைத்தவை யாவும் அனுகூலமடையும். மனநிறைவும், பணவரவும், பூமி வாகனச் சேர்க்கையும், நண்பர்கள் உதவியும் கிட்டும். கௌரவமும், அந்தஸ்தும் குறையாது இருக்கும். வழக்குகளில் வெற்றிகிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு காரியாலயத்தில் மதிப்பும், மேலதிகாரிகளின் பாராட்டும் நிச்சயம் உண்டு. வியாபாரிகளுக்கு தொட்டதெல்லாம் பொன்னாகும் காலம். வியாபார விஸ்தரிப்புக்கு இடமுண்டு. மாணவர்களுக்கு கல்விக்கு உகந்த மாதம், படிப்பில் அக்கறையும் எதிர்ப் பாலாரின் ஆதரவும் கிடைக்கும். பெண்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை, காதலில் வெற்றி, குடும்பசுகமும் உண்டு. கலைஞர்களுக்கு ஆக்கங்கள் அங்கீகரித்து சன்மானம் கிட்டும். விவசாயிகளுக்கு பயிர் செழிப்பும், தனவருவாயும், பூமிலாபமும் உண்டு.

அதிர்ஷ்ட தேதிகள் :

பெப் : 15, 16, 18, 21, 24, 25, 27.

மார்ச் : 2, 5, 6, 8, 11, 14.

சமபலன் திகதிகள் :

பெப் : 14, 19, 23, 28.

மார்ச் : 4, 9, 13.

துரதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : 13, 17, 20, 22, 26.

மார்ச் : 1, 3, 7, 10, 12.

## 2

( 2, 11, 20, 29-ல் பிறந்தவர்கள் )

உங்களுக்கும் இம்மாதம் புத்துணர்வான மாதம். தனலாபமும் தாராளமாகக் கிடைக்கும். இதுவரை எதிர்பார்த்திருந்த விடயம் வெற்றிகரமாக முடியும். வெளிநாடு போவதற்கு சிலருக்குப் பலனுண்டு. வீட்டில் குதூகலம் தாண்டவமாடும். வழக்குகளில் வெற்றி, சத்துருநாசம், கல்வி அதிர்ஷ்டம், வாகன சேர்க்கை ஏற்படும். வழக்குகளில் மட்டுமல்லாது போட்டி — பந்தயங்களிலும் வெற்றிஉண்டு. உடலில் நரம்பு சம்பந்தமான நோய்கள் காட்டி கழிக்கும். உத்தியோகத்தர்களுக்கு தொழில் ஸ்தாபனம் தேவலோகமாக இருக்கும். சகலரது ஒத்துழைப்பும் என்றும் உண்டு. வியாபாரிகளுக்கு லாபத்திற்குமேல் லாபமேற்படும். திரும்பிவராது என்று இருந்த கடன்கள் தாமாகவே வந்து சேரும். மாணவர்களுக்கு வாக்கு சாதுர்யமாக பேசும் ஆற்றலும் கல்விச்சிறப்பும், பிரயாண நன்மையுமுண்டு. பெண்களுக்கு குடும்ப நிறைவும், விருந்துகளும் பணவரவும், கன்னிப் பெண்களுக்கு எதிர்காலம் பற்றிய நல்ல முடிவும் வந்துசேரும் வாய்ப்புண்டு. கலைஞர்களுக்கு கௌரவமும், எதிர்பாலாரின் புதிய உறவும், சிறப்புமுண்டாம். விவசாயிகளை பயிர் ஏமாற்ற மாட்டாது. பசு முதலியவற்றினால் லாபமும் உண்டு.

அதிர்ஷ்ட திகதிகள் ;

பெப் ; 15, 16, 18, 21, 24, 25, 27.

மார்ச் : 2, 5, 6, 8, 11, 14.

சமபலன் திகதிகள் :

பெப் : 14, 19, 23, 28.

மார்ச் : 4, 9, 13.

துரதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : 13, 17, 20, 22, 26.

மார்ச் : 1, 3, 7, 10, 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ( 3, 12, 21, 30-ல் பிறந்தவர்கள் )

3-ம் எண்காரர்களுக்கு இம்மாதம் அதிர்ஷ்டமான மாதமல்ல. இதோ முடிந்துவிடும் என்னும் காரியங்கள்கூட காரணமின்றி வீண் காலதாமதப் படுத்தும். கடன்தொல்லை, இனசன விரோதம், நோய், வீண் பணவிரயம் போன்றவை ஏற்படும். மன அமைதி குன்றும். அவதானமாய் இருக்காவிடில் அவமானப்படவும் வாய்ப்புண்டு. நீதி மன்றத்தில் தண்டனை அல்லது நம்பியவர் வஞ்சித்தல் போன்றவையும் நிகழலாம். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கோபம், சக ஊழியரின் பகைமை, எதிர்பாலாரின் பழிச்சொல் ஏற்படும். வியாபாரிகள் கடன்கொடுக்காது இருத்தலே சிறந்தது. பகைவர் கையோங்கும். மாணவர்களுக்கு பாடசாலையில் தண்டனையும், கூடா நட்பும், கல்வியில் வெறுப்பும் உண்டாகும். பெண்களுக்கு மனநிம்மதி குலையும், கணவன்—மனைவி சண்டை, பொருள் இழப்பு, ஏமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. கலைஞர்களுக்கு பொறாமை காரணமாக போட்டிகளும், வீண் பழியும் ஏற்படும். விவசாயிகளை பயிர்கள் ஏமாற்றிவிடும். அயலவருடன் வீண் வாக்குவாதம், காரியதாமதமும் உண்டாம்.

அதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : 14, 17, 23, 26.

மார்ச் : 4, 7, 13.

சமபலன் திகதிகள் :

பெப் : 19, 20, 28.

மார்ச் : 1, 9, 10.

துரதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : 13, 15, 16, 18, 21, 22, 24, 25, 27.

மார்ச் : 2, 3, 5, 6, 8, 11, 12, 14.

# 4 ( 4, 13, 22, 31-ல் பிறந்தவர்கள் )

இம்மாதம் 4-ம் எண்காரர்களுக்கு உத்தம பலன் செய்யும் மாதம். நினைத்தவை நடக்கும். பணவருவாயும், புதியபூமி — வீடு — வாகன சேர்க்கையும், சுவீப் அதிர்ஷ்டமும், தேகசுகம், நண்பர் உதவி ஆதியன ஏற்படும். இதுவரை இருந்துவந்த குறை தீர்ந்துவிடும். புகழும், அந்தஸ்தும், கௌரவமும் உயரும். உங்களது பகைவர்கள்கூட உங்களைத்தேடி வந்து அனுசரிப்பர். வழக்குகளில் வெற்றியும், சென்றவிடமெல்லாம் சிறப்பும் உண்டாம். உத்தியோகத்தர்களுக்கு காரியாலயத்தில் மதிப்பும், அரச சன்மானமும், சகலரது ஒத்துழைப்பும் உண்டு. வியாபாரிகளுக்கு மிக உன்னதமான காலம். உங்களை யாரும் ஜெயிக்க முடியாது. மாணவர்களுக்கு கல்விச் சிறப்பும், போட்டிகளில் வெற்றியும், எதிர்பாலாரின் அன்பும், பிரயாண சுகமும் உண்டாகும். பெண்களுக்கு நினைத்தவை கைகூடும். எதிர்பாலாரின் ஆதரவும், ஆபரண சேர்க்கையும், தன நிலை உயர்வும் உண்டாம். காதலில் வெற்றி. கலைஞர்களுக்கு உயர்ச்சியும், கௌரவமும் காத்திருக்கிறது. விவசாயிகளுக்கு வீடு நிறையும் மாதம். சகல சிறப்பும் உண்டாகும்.

அதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : 15, 16, 18, 21, 24, 25, 27.

மார்ச் : 2, 5, 6, 8, 11, 14.

சமபலன் திகதிகள் :

பெப் : 14, 19, 23, 28.

மார்ச் : 4, 9, 13.

துரதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : 13, 17, 20, 22, 26.

மார்ச் : 1, 3, 7, 10, 12.

# 5 ( 5, 14, 23-ல் பிறந்தவர்கள் )

5-ம் எண்காரர்களுக்கு மத்திம பலனையே கொடுக்கும். பணவருவாய் மிதமிஞ்சி இருந்தாலும், செலவும் கட்டுக்கடங்காது. குடும்பத்தில் சண்டைசச்சரவு இல்லாவிடினும், வருத்த துன்பங்களினால் மனவாட்டம் ஏற்படும். சிலருக்கு வெளிநாடு போகும் பயணம் தடைப்பட்டு, மாத இறுதியில் வெற்றிதரும். உங்கள் செல்வாக்கை அழிக்க நினைத்தாலும், பலிதமடையாது. பிறர் மனதைப் புண்படுத்தாது இருத்தல் நன்று. உத்தியோகத்தர்களுக்கு சிறுசிறு பிரச்சினைகள் தலைதூக்கும். காரியாலயத்திற்கு அடிக்கடி லீவு போடவும் நேரிடும். வியாபாரிகளுக்கு லாப—நட்டம் கலந்தேவரும். எனினும் மாதக்கடைசியில் முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னேற்றமுண்டு. மாணவர்களுக்கு நண்பர்களினுல் தொல்லேயும், கல்வியில் அக்கறையின்மையும் உண்டாக வாய்ப்புண்டு. பெண்கள் பேசாது இருத்தலே சிறந்ததாகும். அனுவசிய சண்டைகளும், வீண் பணவிரயமும் உண்டாகும். கலேஞர்களுக்கு எங்கு சென்றுலும் ஏமாற்றமும், பண முடையும் ஏற்படும். விவசாயிகளுக்கு செலவு செய்ததைத் திரும்பப் பெறலாம். அவ்வளவு தான். மிச்சம் இராது.

அதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : 14, 19, 20, 23, 28.

மார்ச் : 1, 4, 9, 10, 13.

சமபல திகதிகள் :

பெப் : 15, 16, 17, 21, 24, 25, 26.

மார்ச் : 2, 5, 6, 7, 11, 14.

துரதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : 13, 18, 22, 27.

மார்ச் : 3, 8, 12.

## 6 (6, 15, 24-ல் பிறந்தவர்கள்)

உங்களுக்கு இம்மாதம் சோதனேக்குரிய கால மாகும். வீண் அலேச்சலும், பிரயாணக் கஷ்டமும். பணவிரயமும் ஏற்படும். நீங்கள் யாரை நம்பி யிருந்தீர்களோ அவர் உங்களே ஏமாற்றிவிடுவார், குடும்பத்தில் வீண் மனஸ்தாபமும், அயலாருடன் அபிப்பிராய பேதமும் உண்டாகும். களவு கொடுத்தல், உடல்நோய், எதிர்ப்பாலாரின் வஞ்சனே ஆதியனவும் ஏற்பட வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்தில் பிரச்சினேகளும் சக ஊழியரின் ஒத்துழையாமையும், உயர் அதிகாரியின் தண்டனேயும் கிட்டும். வியாபாரிகளுக்கு நட்டத்திற்குமேல் நட்டமேற்படும். மனமும், உடலும் சோர்ந்துவிடும். ஏமாற்றப்படாமல் பார்த்துக்கொள்ளவும். மாணவர்கள் பாடசாலே யில் தண்டனே பெறவும், கூடாத நட்பால் கெட்டபெயர் வாங்கவும் இடமுண்டு பெண் களுக்கு அவமானம் காத்திருக்கிறது. யாருடனும் அதிகம் பேசாதீர்கள். குடும்பத்தில்கூட சச்சரவுக்கிடமுண்டு, கலேஞர்களுக்கு நீங்கள் எதைச் செய்தாலும், பலன் எதிர்மாருகவே இருக்கும். செலவு அதிகம். விவசாயிகளுக்கு கடன்பட்டே காலம் கழிக்க நேரிடும். உங்களிடம் உதவி பெற்றவரே உங்களே உதறித்தள்ளுவர்.

அதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : 14, 19, 20, 23, 28.

மார்ச் : 1, 4, 9, 10, 13.

சமபலன் திகதிகள் :

பெப் : 16, 25.

மார்ச் : 6.

துரதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : 13, 15, 17, 18, 21, 22, 24, 26, 27.

மார்ச் : 2, 3, 5, 7, 8, 11, 12, 14.

## 7 (7, 16, 25-ல் பிறந்தவர்கள்)

உங்களுக்கு மிக வாய்ப்பான மாதம். உங்களே வெறுத்தவர்கள் உங்களே அணேப்பர். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும். வாகனசேர்க்கை, காணிபூமி வாங்கல், இனசன கொண்டாட்டம், நண்பர் உதவி, குடும்ப சுகம் உண்டாம். சூடு சம்பந்தமான சிறுசிறு நோய் வந்தாலும் பயப் படுவதற்கில்லே. நீங்கள் முயற்சி செய்யாவிட்டாலும் காரியங்கள் தானுகவே சுபமாக முடியும். அந்தஸ்து, கௌரவம் பாதுகாக்கப்படும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு, மேலதிகாரிகளின் பாராட்டு, சகஊழியர் ஒத்துழைப்பு, எதிர்ப்பாலாரின் உதவி என்பன நடக்கும். வியாபாரிகளுக்கு கிளே ஸ்தாபனங்கள் திறக்க வாய்ப்புண்டு. அதிர்ஷ்டம் உங்கள் பக்கமே. மாணவர்களுக்கு கல்விச்சிறப்பு, ஆசிரியர்களின் பாராட்டு, எதிர்ப்பாலாரின் ஒத்துழைப்பு ஏற்படும். பெண்களுக்கு குடும்பத்தில் ஒரு நன்மை நடத்தல், ஆடை ஆபரண சேர்க்கை, புதிய உறவுகள் ஆதியன உண்டாம். கலேஞர்களுக்கு இதுவரை கொடுக்கப்படாத இடம் உங்களுக்குக் கிடைக்கும். பணவருவாய் நன்று. விவசாயிகளுக்கு உத்தம காலம். பயிர்ச்செழிப்பு, வாகன லாபம் உண்டு.

அதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : 15, 16, 18, 21, 24, 25, 27.

மார்ச் : 2, 5, 6, 8, 11, 14.

சமபலன் திகதிகள் :

பெப் : 14, 19, 23, 28.

மார்ச் : 4, 9, 13.

துரதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : 13, 17, 20, 22, 26.

மார்ச் : 1, 3, 7, 10, 12.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 8 (8, 17, 26-ல் பிறந்தவர்கள்)

8 எண்காரர்களுக்கு இம்மாதம் சமபலனையே கொடுக்கும். பணவருவாய் தாராளமாக இருந்தும் மிச்சம் இருக்காது. குடும்பச் சிக்கல், பொருள்நட்டம், களவு கொடுத்தல், ஆதியன இருந்தாலும் மாத இறுதியில் சிறிது சிறிதாக நற்பலன் கிட்டும். லேசாக ஏமாற்றிவிடுவார்கள் கவனம். மன அமைதி இடையிடையே குன்றும். வழக்குகள் பின்போடப்படும். உத்தியோகத்தர்களுக்கு பதவிஉயர்வு—இடமாற்றம் கிடைத்தும் நிம்மதியின்மை, உயர் அதிகாரிகளின் தொந்தரவு, எதிர்பாலார் விரோதம் உண்டாகும். வியாபாரிகளுக்கு ஈமொய்த்ததுபோன்ற வியாபாரம் இல்லாவிடினும், நட்டம் இல்லை. எதிரிகள் ஜாக்கிரதை. மாணவர்களுக்கு எதிர்ப்பாலாரினால் ஏமாற்றமும், பிரயாணக்கஷ்டமும் இருந்தாலும் படிப்படியாக நன்மை பயக்கும். பெண்களுக்கு அயலாருடன் வீண்சண்டை, கட்டுமீறிய செலவு இருந்தாலும் குடும்ப நிறைவு உண்டு. கலைஞர்களுக்கு பரிசு கிட்டினாலும் பகைமைஉண்டு. விவசாயிகளுக்கு நல்ல விளைவு இருந்தாலும், செலவு மிக மோசம்.

அதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : **14, 19, 20, 23, 28.**
மார்ச் : **1, 4, 9, 10, 13.**

சமபலன் திகதிகள் :

பெப் : **13, 17, 22, 26.**
மார்ச் : **3, 7, 12.**

துரதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : **15, 16, 18, 21, 24, 25, 27.**
மார்ச் : **2, 5, 6, 8, 11, 14.**

## 9 (9, 18, 27-ல் பிறந்தவர்கள்)

உங்களுக்கு இம்மாதம் 25 வீத நன்மையே உண்டு. பாதகம்தான் அதிகம், நீங்கள் ஒன்றை நினைக்க நடப்பது வேறாகவே இருக்கும். மனச்சோர்வு, பணச்செலவு, இருந்தாலும் கௌரவமும், அந்தஸ்தும் குறையாது. ஒரு வஞ்சனையிலிருந்து தப்பவேண்டும். உசாராக இருக்கவேண்டும். இல்லச்சிறப்புண்டு. குடும்பசுகம் உண்டு. நோய்வாய்ப்பட நேரிடும். சிலருக்கு சத்திரசிகிச்சைகூட இடம்பெறலாம். உத்தியோகத்தர்களுக்கு காரியாலயத்தில் நிம்மதியே இருக்காது. வீட்டில் மட்டும்தான் நிம்மதி உண்டு. வியாபாரிகளுக்கு கொள்வனவில் ஏமாற்றப்படுவீர்கள். சுமாரான காலம். மாணவர்களுக்கு பாடசாலையில் சண்டையும், மனத்தாங்கலும், நண்பர் உதவியும் ஏற்படும். பெண்களுக்கு அநாவசிய செலவும், வீண்வம்பில் மாட்டிக்கொள்ளவும் வாய்ப்புண்டு. கலைஞர்களுக்கு அணைத்த கையே அடிக்கும்: ஆயினும் நண்பர் உதவுவர். விவசாயிகளுக்கு பயிர் செழித்தாலும் பணம் வீடுவந்து சேராது. வாகனக் கஷ்டம் உண்டாகும்.

அதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : **14, 19, 20, 23, 28.**
மார்ச் : **1, 4, 9, 10, 13.**

சமபலன் திகதிகள் :

பெப் : **1, 7, 26.**
மார்ச் : **7.**

துரதிர்ஷ்ட திகதிகள் :

பெப் : **13, 15, 16, 18, 21, 22, 24, 25, 27.**
மார்ச் : **2, 3, 5, 6, 8, 11, 12, 14.**

**உங்கள் கவனத்திற்கு...**

எண்சோதிடம் சம்பந்தமான கட்டுரை, கதை, கவிதைகள் அனுப்பி வைக்கலாம். பொருத்தமானவை அவ்வப்போது பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்ட வழிகாட்டி

(தை இதழ் தொடர்ச்சி)

ஒவ்வொரு ஆங்கில மாதத்திலும் 1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள், பெயர் மாற்றத்தினால் பெயர் எண் 10, 19, 28, 37, 46, 55, 64, 73, 82, 91, 100 ஆகிய எண்களில் உள்ளவர்களும் 1-ம் எண்ணாகிய சூரிய கிரகத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள். அதிலும் யூலை 21 முதல் ஆகஸ்ட் 20-27 வரை உள்ள காலப் பகுதியில் பிறந்து 1, 10, 19, 28 ஆகிய திகதிகளைப் பிறந்த திகதிகளாக உடைய 1-ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள் இந்த எண்ணின் முழு ஆதிக்கத்திற்கும் கட்டுப்பட்டவர்கள்.

இந்த எண்காரர்கள் நேர்மை மிக்கவர்கள், குறுக்கு வழியில் செல்லாத நாணயஸ்தர்கள், ஆனால் செளகரியமான வாழ்வு பெற்றவர்கள். எக்காரியத்தில் ஈடுபட்டாலும், அது எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், பின்வாங்க மாட்டார்கள். வஞ்சகம், சூது, கபடம், ரகசியம் இல்லாதவர்கள். எதையும் நேரே சொல்லி விடுவார்கள். இவர்களுக்கும் பணம் தானாக இவர்களைத்தேடி வருமேயன்றி, இவர்கள் பணத்தைத் தேடி அலையும் திறமை இருக்காது. பிறர்சொத்துக்கு ஆசைப்படமாட்டார்கள். ஒரு தொழிலில் இருந்தால் அந்தத் தொழிலின் மேலான நிலைக்கு வந்துவிடுவார்கள். அரசாங்க ஆதரவு இவர்களுக்கு நிறைய உண்டு.

இந்த எண்காரர் அரசியலில் ஈடுபடலாம். ஜோதிடர், டாக்டர், வழக்கறிஞர், நீதிபதி, பேராசிரியர், பேச்சாளர், எழுத்தாளர். இயல்—இசை—நாடகத்துறை, அரசாங்க உத்தியோகம், தனியார் நிறுவனத்தில் தொழில், மின்சாரம் சம்பந்தமான தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபடலாம்.

இவர்களுடைய 10வது, 19வது, 28வது, 37வது, 46வது, 55வது வயதுகளில் முக்கியமான மாறுதல்கள் நிகழக்கூடும்.

இவர்களுக்கு இருதய, ஜீவன உறுப்பு சம்பந்தமான—உபத்திரவங்களும், முக்கியமாகக் கண் பார்வைக் குறைவு ஏற்படும். அடிக்கடி கண்ணைப் பரிசோதித்துக்கொள்வது நல்லது.

இவர்களுடைய அதிர்ஷ்ட நாள் ஞாயிறு. சிறப்பாக இவர்களது சொந்த எண்களாகிய 1, 10, 29, 28 திகதிகளில் ஏதாவது ஒன்று இந்தக் கிழமையில் வருமானால் மிகவும் நல்லது.

## பெயர் எண்களின் பலன்கள்

**10.** இவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவர். செல்வம் நிலைத்து நிற்காது. தொழிலில் படிப்படியாக முன்னேற்றம் தோன்றும். ஒருவருடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்கக்கூடிய எண். உயர்வு அல்லது தாழ்வு இதில் எதை விரும்பிக்கொண்டாலும் அது நடக்கும்.

**19.** இவர்கள் அமைதி, அந்தஸ்து, நற்பெயர். புகழ், செல்வவிருத்தி உடையவர்கள். இறக்கும்வரை சுறுசுறுப்பாக வேலை செய்வார். எதிர்காலத்திற்காக வகுக்கும் திட்டங்கள் வெற்றியளிக்கும். வாக்கு சதுரியமும் உண்டு. எங்கு சென்றாலும் நல்ல பெயரை வாங்கிக்கொள்வர்.

**28.** ஆரம்பத்தில் முன்னேற்றம் காணப்பட்டாலும், நாட்செல்லச் செல்லத் துரதிர்ஷ்டமான வீழ்ச்சியையே குறிக்கின்றது. இவர்களுக்கு எதிர்ப்புச் சக்திகள் நிறைந்துள்ளன. கடன் கொடுத்தால் திரும்பிவராது. பிறரிடத்தில் நம்பிக்கை வைத்து ஏமாற்றப்படுவதையும், வியாபாரத்தில் போட்டிகளையும். சட்டத்தினால் கஷ்டத்தையும் அனுபவிப்பார். இது ஒரு அதிர்ஷ்ட எண் அல்ல.

**37.** மிகக் கீழ்மட்டத்தில் உள்ளவரையும், மிக மிக உயரத்திற்குக் கொண்டு செல்லும் தன்மை உள்ளது. இவர்களை எல்லோரும் விரும்புவார்கள். காதலிலும், எதிர்பாலாரின் தொடர்பாலும் (ஆணுக்குப் பெண்ணும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணுக்கு ஆணும்) அதிர்ஷ்டம் உண்டு. வசிகரமான பேச்சு வன்மையும், கற்பனை வளமும் உடையவர்கள். பேச்சாளராகவும், எழுத்தாளராகவும், அரசியல் வாதியாகவும் திகழ்வார். பல திக்குகளில் இருந்தும் பொருள் வந்து சேரும். மிகச் சௌகரிய மான வாழ்வும், நிறைந்த செல்வமும் கிடைக்கும். சாதாரணமான மனிதனை உன்னத நிலைக்குக் கொண்டு வரும். இவ்வெண் பேராசை கொண்டால் கவிழ்த்து விழுத்தி விடும்.

46. இவர்கள் எல்லா வகைச் செல்வங்களையும் பெறுவர். இராச யோகத்தைக் கொடுத்து, அரசாளும் பதவிக்கு உயர்த்தும், சொத்துச் சுகம் தானுக வந்துசேரும். வயது ஏற ஏற சர்வ சிறப்புக்களும் கிட்டும். அரசு அதிகாரிகளின் ஆதரவு நிறையக் கிடைக்கும்,

55. இவர்கள் அறிவில் மேம்பட்டவர்கள், பேரறிஞர்கள். வாழ்வில் அறிவுச்சுடர் பிரகாசிக்கும். பகைவரை வெற்றிகொள்வர், முன் வைத்த காலைப் பின் வைக்கமாட்டார்கள். நாணயம் தப்பாதவர் என்று பெயர் பெறுவர். இவர்களது அறிவு வளர்ச்சியைச் சரியாகப் பயன்படுத்தாவிடில், விபரீத விளைவுகள் ஏற்பட இடமுண்டு.

64. இவர்கள் அரசியலில் உன்னத பதவிக்கு வருவார். அவரவருக்குத் தக்கபடி பேசத் தெரிந்தவர்கள். யாவரையும் ஈர்க்கும் சக்தியுடையவர்கள். தோல்வியைக்கூடச் சர்வ சாதாரணமாக மதிக்கக்கூடிய மனேவலிமையும், அறிவும் படைத்தவர்கள்.

73. இவர்கள் எப்போதும் அரசின் ஆதரவைப் பெற்றுக்கொண்டே இருப்பர். எதையும் நிதானமாகச் செய்யும் ஆற்றல் படைத்தவர்கள். அதிகாரமும், செல்வமும், புகழும் படிப்படியாகக் கிட்டும். வீடு, தோட்டம், பசு போன்றவற்றை நிறைய வைத்திருப்பார்கள்.

82. இது மிகவும் சக்திவாய்ந்த எண். ஓயாது உழைப்பர்—சுறுசுறுப்பாக வயது முதிர்ந்தாலும் வேலைசெய்வர். இடைவிடாத முயற்சியாலும், வல்லமையாலும் உயர்ந்த நிலையில் இருப்பர். பெரியோருக்கு மரியாதை கொடுத்துக் கனம் பண்ணுவர். தங்கம், இரத்தினம் விளையும் தொழில் அதிபதியாக இருப்பர். இந்த எண்ணின் ஆதிக்கத்தில் பெயர் சரியாக அமைந்தால், நீரை வென்று தண்ணீருக்குள் எவ்வளவு நேரமும் இருக்க முடியும்.

91. இவர்கள் கடவுளுக்குப் பயப்பட்டவர்கள். தீங்கென்று தெரிந்தால் திரும்பியும் பார்க்க மாட்டார்கள். கோவில்களுக்கு அடிக்கடி யாத்திரை செய்வர். சங்கீதப் பிரியர்கள், கப்பல், கடல் வியாபாரத்தில் பொருள் சேரும். பூமிப்பலன் ஏராளம் உண்டு.

100. இவர்கள் முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம். வரவும் கூடியதாக இருக்கும்; அதற்கேற்பச் செலவும் கூடியதாகவே இருக்கும். நவநாகரிகமாக வாழ விரும்புபவர்கள். இவர்கள் அயராது உழைத்து, அதைச் செலவுசெய்து இன்பம் நுகர்பவர்கள்.

அதிர்ஷ்ட திகதிகள் :
*1, 10, 19, 28.* ஆனல் *4–13–22–31*-ந் திகதிகளில் முக்கிய சம்பவங்கள் தானே வந்து நன்மை செய்யும்.

துரதிர்ஷ்ட திகதிகள் : 8, 17, 26

அதிர்ஷ்ட கிழமை : ஞாயிறு

துரதிர்ஷ்ட நிறம் : கறுப்பு

அதிர்ஷ்ட நிறம் : மஞ்சள், வெளிரான சிவப்பு, வெளிரான நீலம்

மோதிரத்திற்கேற்ற அதிர்ஷ்டக் கல் :
மஞ்சள் புஷ்பராகம் (Yellow Topaz)
மஞ்சள் வைரம் (Yellow Diamond)
கரு நீலம் (Black Saphire)

ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய கஷ்ட நிவாரணி "லக்"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மணிப்புரி**
**காஞ்சிபுரம்**
**வூலி**
**G-44**
**றேயல் ரிசூ**
**ஆராதன**
**சிவோன்-சாறிகள்**



**பட்டு வேட்டி**
**சால்வை**
**றெடிமேட் சேட்**
**சூட்டிங்**
**சேட்டிங்**
**ஆகிய சகல....**

வெளிநாட்டுப் பிடவைகளுக்கும், உள்ளூர் பிடவைகளுக்கும்
புகழ்பெற்ற ஸ்தாபனம்

# சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

241, பிரதான வீதி, கொழும்பு—11. தொலைபேசி: 24153

தலைமையகம் :
நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்
58, பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7232

கிளை :
சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
172 (84), கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7713


* சூடான கோப்பி, தேநீர்
* குளிர் பானங்கள்
* ஓவல், கென்விட்டா, போன்விட்டா, ஹோர்லிக்ஸ், நெஸ்ரோ மோல்ட்
* சுத்தமான, சுவையான சிற்றுண்டி வகைகள்
* மற்றும் அறுசுவை சுவீட்ஸ் வகைகள் அனைத்திற்கும்

அன்றும் — இன்றும் — என்றும்

# றேயல் கோப்பி சென்ரர்

10, பஸ் நிலையம், — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உங்களுக்குத் தேவையான சகல அளவு

# கருங்கற்கள்

பெற்றுக்கொள்ள வவுனியாவில் ஒரே ஸ்தாபனம்

## கருணா மெற்றல் இன்டஸ்றீஸ்

யாழ் வீதி, தாண்டிக்குளம், வவுனியா.

தலைமையகம் :

**கருணாமூர்த்தி அன்கோ**

கந்தசாமி கோவில்றோட், வவுனியா.

தொலைபேசி : 377

கணேசன் ஸ்டோர்ஸ்
13, மத்திய வீதி
மட்டக்களப்பு



Edited and Published by S. C, S. Chithambaranathan
Printed at St. Joseph's Catholic Press, Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org